துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா! மக்கள் வெள்ளத்தில் அரங்கம்!

சோழவந்தான் தொகுதி சார்பில் ஜல்லிக்கட்டுப் போட்டி!

அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்!

மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அலங்காநல்லூர் அருகில் உள்ள கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் மாபெரும் ஜல்லிக்கட்டு போட்டியை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தேனி நாடாளுமன்ற உறுப்பினர், தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், மதுரை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்த போது எடுத்தபடம். உடன் வருவாய்த்துறை அதிகாரிகள், போலீசார் மற்றும் கழகத்தினர் உள்ளனர். ஜல்லிக்கட்டில் பங்கேற்ற காளைகளுக்கும், மாடுபிடி வீரர்களுக்கும் தங்கக்காசுகள், டிவி, மிக்சி, சைக்கிள், அண்டா உள்ளிட்ட சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவினை பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் குடும்பம் குடும்பமாக பங்கேற்று பார்வையாளர் மாடத்தில் அமர்ந்து மகிழ்ச்சியுடன் கண்டு ரசித்தனர்.

பிரதமர் பொது நிவாரண நிதி மூலம் ரூ.31.50 லட்சம் மருத்துவ நிதி உதவி!

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஏற்பாடு!

சென்னை, பிப். 17 - இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் போன்ற கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பிரதம மந்திரியின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி பெற்று தரும்படி வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமியிடம் வரும் கோரிக்கைகள் மீது தனி கவனம் செலுத்தி அதனை பிரதமர் அவர்களுக்கு கடிதங்கள் மூலம் நோயாளிகளுக்கு நிதியுதவி பெற்றுத் தருகிறார்.

இதில் தொகுதி மக்கள் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமியை அணுகி மருத்துவ உதவி கோரியவர்களுக்கு நிதி உதவிகளை பெற்று தருகிறார் இத்திட்டத்தின் மூலம் மாதம் 20 நோயாளிகளுக்கு சுமார் ரூபாய் 31.50 லட்சம் அளவிற்கு நிதி உதவி பெற்று தந்து உள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக திருப்பத்தூர் & காஞ்சிபுரம் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
18.02.2025 செவ்வாய்க்கிழமை	காலை 9.00 மணி	திருப்பத்தூர்	எஸ்.ஆர்.கே.கன்வென்ஷன் ஹால், ஈத்கா ரோடு, (வடமலை பவன் பின்புறம்) திருப்பத்தூர்.
19.02.2025 புதன்கிழமை	காலை 9.00 மணி	காஞ்சிபுரம் தெற்கு	ப்ரியா மஹால், மல்லியங்கரணை செல்லும் வழி, உத்திரமேரூர்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 14-02-2025

முன்னாள் படைவீரர் நலத்துறை

முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்

சிறப்பம்சங்கள்

- முன்னாள் இராணுவத்தினர் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள் தொழில் தொடங்க மூலதனமாக ரூ.1 கோடி வரையிலான கடன் உதவி
- கடன் தொகையில் 30% மூலதன மானியம்
- மீதமுள்ள கடன் தொகைக்கு 3% வட்டி மானியம்

செ.ம.தொ.இ./167/வரைகலை/2025

இத்திட்டத்தின் கீழ் 17.2.2025 முதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. www.exwel.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம்.

முன்னாள் படைவீரர்கள் / படைவீரர்களை சார்ந்த வாரிசுகள், கைம்பெண்கள் ஆகியோர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தினை அணுகலாம்.

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009